[திரு. க. பாண்டியராஜன்] [2019 பிப்ரவரி 14

எடுத்துக்கொண்டிருக்கிறோம். நல்ல funding இந்த நிறுவனத்திற்குக் கிடைத்துக்கொண்டிருக்கின்றது. நிலையான ஒரு கட்டமைப்பு பெரும்பாக்கத்தில் உருவாக்கப்பட்டு வருகின்றது. இந்த நிறுவனத்தில் இருக்கக்கூடிய ஆய்வாளர்களை நிரந்தரப்படுத்துவது தொடர்பான கருத்துரு அரசின் ஆய்வில் இருக்கின்றது. இது செம்மொழி தமிழாய்வு நிறுவனத்தின் ஆய்வில் இருக்கின்றது. இந்த முடிவுகள் அனைத்தும் மத்திய அரசு எடுக்கின்ற முடிவுகள்தான். தற்போது ரூ.50 கோடிக்கு proposal கொடுத்துள்ளோம். சென்ற பட்ஜெட் உரையில், 26 நாடுகளில் தமிழ் வள மையங்களை உருவாக்குவதற்கும், தமிழ்நாட்டில் அல்லாமல் இந்தியாவில் இருக்கின்ற 10 மாநிலங்களில் உருவாக்குவதற்காகவும், ரூ.50 கோடிக்கு அவர்களிடத்தில் உதவி கேட்டு proposal கொடுத்திருக்கிறோம். எல்லாவற்றையுமே project based ஆகக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அதனால்தான் இந்த மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. அடுத்த ஆண்டு கண்டிப்பாக ரூ.50 கோடியை மத்திய அரசிடமிருந்து பெறமுடியும் என்ற நம்பிக்கையில் நாங்கள் இருக்கிறோம். செம்மொழி தமிழாய்வு நிறுவனம், தமிழக அரசாங்கத்தின் அனைத்து உதவிகளையும் பெறக்கூடிய ஒரு மத்திய அரசாங்கத்தின் நிறுவனம். அது எந்தவிதத்திலும் அழிந்துகொண்டிருக்கிறது என்றோ, இறந்துகொண்டிருக்கின்றது என்றோ கருத்தை பதிய வைக்க வேண்டாம். இது தழைத்தெழுந்து மிக உன்னதமான நிலைக்கு, எப்படி உலகத் தமிழ்ச் சங்கமும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும், தமிழ்ப் பல்கலைக்கழகமும், இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகமும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசினால் மீட்டெடுக்கப்பட்டு, அவற்றின் தனித்தன்மை மாறாமல் மீட்டெடுக்கப்பட்டதோ அதுபோல செம்மொழி தமிழாய்வு நிறுவனமும், மீண்டும் தழைத்தோங்கி விளங்கும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் உறுதி கூறுகிறேன். நன்றி. (குறுக்கீடுகள்)

(ஆ) தமிழ்நாடு வனச் சட்டம், 1882, பிரிவு 16(ஏ), நடைமுறைப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள், வருகிறேன். (குறுக்கீடு) நான் எடுக்கிறேன். இருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். கூப்பிடுவதற்குள் ஏன் கேட்கிறீர்கள்? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

2019 பிப்ரவரி 14]

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 8-1-2019 அன்று தமிழ்நாடு வனச் சட்டம், 1882 பிரிவு 16-ல் திருத்தம் கொண்டுவந்து. 16ஏ என்ற புதிய பிரிவு சேர்க்கப்பட்டு, கூடலூர் ஜென்மம் எஸ்டேட் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டப் பிரிவு 17, வனச் சட்டம், 53-ல் உள்ள பூமிகளை R.F. ஆக்கப்படும் என்றும் கூறப்பட்டது. பல வழக்குகள் பல நீதிமன்றங்களில் உள்ள நிலையில், செட்டில்மென்ட் ஆகாத நிலையில் அந்த நிலங்கள் முறையாக வரைமுறை செய்யப்பட வேண்டும். கூடலூர் ஜென்ம சட்டத்திற்கு எதிராகவும், இயற்கை நீதிக்கு எதிராகவும், அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராகவும் கொண்டு வரப்பட்டுள்ள திருத்தத்தால் 35,000 ஏக்கரில் வசிக்கின்ற 16,000 குடும்பங்களும், பிரிவு 53-ல் வசிக்கின்ற 23,000 குடும்பங்களும், தாங்கள் வெளியேற்றப்படுவோம் என்கின்ற அச்சத்தில் உள்ளதால், பதட்டமான சூழ்நிலை நிலவுகின்றது. ஆகவே, இதனை அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அரசின் கவனத்தினை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூர் ஜென்மம் எஸ்டேட் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1969-ன்படி உரிமை கோரும் மனுக்கள், வன நிர்ணய அலுவலர்களால் பெறப்பட்டு, அவை இறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், மீண்டும் ஒரு முறை இதே நடைமுறையையே தமிழ்நாடு வனச் சட்டம், 1882-ன்கீழ் மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்பதைக் கருத்தில் கொண்டு, சட்டமன்றப் பேரவையில் சட்டமுன்வடிவு தாக்கல் செய்யப்பட்டு, சட்டமன்றப் பேரவையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டமுன்வடிவில் பரிந்துரைக்கப்பட்ட தமிழ்நாடு வனச் சட்டம், 1882-ன் பிரிவு 16ஏ, கூடலூர் ஜென்மம் எஸ்டேட் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1969 பிரிவு 53-ன்கீழ் வகைப்படுத்தப்பட்ட வனப் பகுதிக்கு மட்டுமே பொருந்தும். அதாவது, கூடலூர் ஜென்மம் ஒழிப்பு மற்றும் ரயத்துவாரிக்கு மாற்றும் சட்டம் 1969, பிரிவு 17-ன்கீழ் வரும் நிலங்களுக்கு தமிழ்நாடு வனச் சட்டம், 1882 பிரிவு 16ஏ என்று புதிதாகச் சேர்க்கப்படும் சட்டப் பிரிவு பொருந்தவே பொருந்தாது. யாருக்கும் எந்தவிதப்*

பாதிப்பும் இருக்காது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) யானைக்கவுனி பாலப் பணிகளை விரைவுபடுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.*

முற்பகல் 11-45

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நைனா பாலம் என்றழைக்கப்படுகின்ற யானைக்கவுனி பாலம், இருப்புப் பாதைகளை அகலப்படுத்தவதற்காகவும், பாதைகளை மேலும் விரிவுபடுத்துவதற்காகவும் 27-12-2016 அன்று மூடப்பட்டது. அதன் பிறகு இந்த பாலத்தைக் குறித்து இதே அவையில் 2017 ஆம் ஆண்டு இரண்டு முறையும், 2018 ஆம் ஆண்டு ஒரு முறையும் கேள்வி எழுப்பியதன் வாயிலாக, கடந்த 28-2-2018 அன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 26 கோடியே 45 இலட்சம் ரூபாயை மாநகராட்சி நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்தார். இருந்தாலும், அந்தப் பாலம் மூடப்பட்டு, இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. இது 50 சதவிகிதம் மத்திய அரசு மற்றும் 50 சதவிகிதம் மாநில அரசின் பங்களிப்போடு நடைபெற வேண்டிய பாலப் பணியாகும். இன்றைக்கு தமிழக அரசும், மத்திய அரசும் இணைப்புப் பாலத்தைப்போல இணைந்து, இந்தப் பாலத்தை விரைவாகக் கட்டுவதற்குண்டான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்தப் பாலத்திற்கு யானைக்கவுனி பாலம் என்று பெயர். கோயம்புத்தூரிலே ஒரு யானையைப் பாதுகாக்க இந்த அரசு என்னவெல்லாம் நடவடிக்கை எடுக்கிறதோ அதேபோல் இந்த யானைக்கவுனி பாலத்திற்கும் நடவடிக்கை எடுத்து உடனடியாகக் கட்டித் தந்து, இந்த மாநகரத்து மக்களையும் காப்பாற்ற வேண்டுமாய் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*